**பண்டாரகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 14 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பண்டாரகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மூலதன செலவின விடயம் 209 இன் கீழ் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்றை நிர்மாணித்தல் மற்றும் மயான நிலங்களைச் சுற்றி மதில் நிர்மாணித்தல் என்பவற்றுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,570,813 தொகையான செலவினம் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக, காணி, கட்டிடக் கணக்கு ரூபா 1,570,813 இனாலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு ரூபா 1,570,813 இனாலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 231,250 பெறுமதியான தளபாட உபகரணங்களுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மூலதனச் செலவினம் ரூபா 231,250 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது செலவின விடயம் 509 இன் கீழ் பொதுச் சந்தையின் மேல் மாடியில் மின்சார பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 238,980 தொகை மீண்டெழும் செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், மூலதன செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடக்கூடிய பயன்பாட்டுச் சேவைகள் கணக்கில் வைக்கப்பட வேண்டிய மீதி ரூபா 353,365 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,531,822 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக பயன்பாட்டுச் சேவைகள் கணக்கின் மீதி ரூபா 3,178,457 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபை கடன் கணக்கில் வைக்க வேண்டிய மீதி ரூபா 353,365 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,677,856 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மாகாண சபைக் கடன் கணக்கின் மீதி ரூபா 1,324,491 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் வேலைக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 4,174,653 ஆக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது பணம் கிடைத்திருந்த 04 வேலைகளுக்குரிய ரூபா 2,026,026 தொகை மற்றும் ரூபா 48,450 பெறுமதியான சபையின் வேலை 01 இற்குரிய பெறுமதியும் சேகரிக்கப்பட்டு வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 6,249,129 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 2,074,476 தொகை அதிகரித்துக் காண்பிக்க்பபட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியப் பெறுமதி ரூபா 13,071,694 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,195,596 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மூலதன மானியத்தின் பெறுமதி ரூபா 2,123,902 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினம் ரூபா 32,999,401 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் 2013 ஆம் ஆண்டிற்குரிய இரண்டு வேலைகளுக்காகச் செலுத்தவேண்டிய ரூபா 49,427 மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி சேர்க்கப்பட்டு ரூபா 33,048,828 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் மூலதனச் செலவினம் ரூபா 49,427 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,499,788 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யாமையின் காரணமாக கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,499,788 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) 2015 ஆம் ஆண்டில் தளபாட உபகரணங்கள் மற்றும் பொருத்திகளின் கொள்வனவு ரூபா 742,065 ஆக இருந்த போதிலும், ரூபா 1,705,651 ஆக தளபாட உபகரணங்கள் மற்றும் பொருத்திக் கணக்கிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் பதியப்பட்டமையின் காரணமாக அக்கணக்கில் ரூபா 963,586 தொகை வீதம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) ரூபா 48,136 தொகையான நூலகப் புத்தகங்களை அகற்றுதல் நூலகப் புத்தகக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டமையின் காரணமாக நூலகப் புத்தகக் கணக்கின் மீதி ரூபா 48,136 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 1,461,171 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,803,764 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 342,593 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 63,535,065 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 396(ஈ) இன் பிரகாரம் வங்கி நடைமுறைக் கணக்கு இலக்கம் 121-1-001-0-4024069 (மக்கள் வங்கி) இற்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களை விஞ்சிய ரூபா 172,651 பெறுமதியான 43 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 25,439,399 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 22,362,074 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 3,242,126 தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஆதனவரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 2,846,035 நிலுவையொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 1,655,654 தொகை அதாவது 58 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஆதனவரி பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 3,650,506 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அதில் ரூபா 2,116,724 தொகை அதாவது 58 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.3 வியாபார வரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 169,660 தொகையான நிலுவையொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 158,260 அதாவது 93 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக பற்றுச்சீட்டிடல் ரூபா 2,737,430 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 2,536,120 அதாவது 93 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) வியாபார வரி ஆண்டொன்று ஆரம்பித்து முதல் மூன்று மாதங்களுக்குள் வரி அறவிட வேண்டியிருந்த போதிலும், வியாபார வரி செலுத்திய 843 வியாபாரங்களில் 568 வியாபாரங்களிலிருந்து மார்ச் மாதத்தின் பின்னர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கைத்தொழில் வரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 68,750 நிலுவையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 48,250 தொகை அதாவது 70 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்கான பற்றுச்சீட்டில் ரூபா 782,800 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 758,800 தொகை அதாவது 97 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முதல் 03 மாதங்களில் வரித் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கைத்தொழில் வரி செலுத்திய 204 பேர்கள் 2015 ஏப்ரல் மாதத்தின் பின்னர் சபைக்கு வரி செலுத்தியிருந்தனர்.

**2.2.5 கடைவாடகை**

(அ) அதிகாரிபத்து உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் பொதுச் சந்தையிலுள்ள 21 கடைகளில் 10 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடாதிருந்ததுடன் ரூபா 725 முதல் 1,050 வரை மாதாந்த வாடகையொன்று சபையினால் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 19, 20, 21 ஆம் இலக்க கடைகளில் முறையே இரண்டு வாடகையாளர்கள் பொதுச் சந்தையின் கடைகளில் வியாபார நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருந்த போதிலும் சபையினால் எந்த வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) புதிய சந்தையில் 23 கடைகளில் 04 கடைகள் மாத்திரம் முறையே மாதாந்த வாடகை ரூபா 600 வீதம் இருவருக்கும், ரூபா 1,200 வீதம் ஒருவருக்கும், ரூபா 1,500 வீதம் ஒருவருக்கும் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) பொதுச் சந்தையில் 21 கடைகளில் 10 கடைகளும் மற்றும் புதிய சந்தையில் 23 கடைகளில் 19 கடைகளும் உடன்படிக்கைக் காலம் 2 முதல் 8 வருடங்கள் வரையான காலவீச்சினைக் கடந்திருந்த போதிலும் அந்த உடன்படிக்கைகளைப் புதுப்பிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 1980 திசெம்பர் 03 ஆந் திகதிய மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க சுற்றிக்கையின் 07 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக பொதுச் சந்தையில் 21 கடைகளில் 10 கடைகளும் புதிய சந்தையில் 23 கடைகளில் 10 கடைகளும் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

**2.2.6 காணி விற்பனையின் அடிப்படையிலான வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி ஏல விற்பனை செய்யும் போது ஏலமிடப்பட்டு பெறப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் ஒரு சதவீத வருமானமொன்று சபையினால் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாது சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரினால் தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டில் ஒரு சதவீதமான ரூபா 1,349,122 தொகை 14 காணி விற்பனைகளில் 2015 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பீட்டிற்கும் சந்தை விற்பனைப் பெறுமதிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கவனத்தில் கொண்டு மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 விளம்பர அறிவித்தல் கட்டணம்**

2014 திசெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைக் குடியரசின் 12-58/2 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பண்டாரகம பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டிற்குரிய விளம்பர அறிவித்தல் தொடர்பான அறிவுறுத்தலின் படி பிரதேச சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்கள் நிர்மாணித்தல் மற்றும் காட்சிப்படுத்தலுக்காக காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 நவம்பர் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவு பௌதீக பரீட்சிப்பிற்குட்படுத்தப்பட்ட கட்டணம் அறவிடவேண்டிய 25 விளம்பர

அறிவித்தல் / பெயர்ப் பதாதைகளுக்காக உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெறாதிருந்த வருமானம் ரூபா 149,700 ஆகும்.

**2.2.8 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 63,298,082 தொகையானது கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கிடைக்கவேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 6,326,485 |
| முத்திரைக் கட்டணம் | 56,971,597 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 1,499,788 தொகையான நிலுவை ஓய்வூதியப் பங்களிப்பு 2016 யூன் 15 ஆந் திகதி வரையிலும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்புப் பணம் அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் செயலாளர் மற்றும் கணக்காளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறின்றி ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 18,139 தொகை நிதியத்திற்கு தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) விபத்துக்களினால் ஏற்பட்ட இழப்பினை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்காக 04 வாகனங்களுக்காக பழுதுபார்த்தல்களுக்கு சபைக்கு செய்ய வேண்டியேற்பட்ட செலவினம் ரூபா 224,865 ஆக இருந்த போதிலும், அந்த வாகனங்களுக்காக காப்புறுதி இழப்பீடாக ரூபா 193,714 தொகை மாத்திரமே கிடைத்திருந்தமையால் சபையின் மூலம் செலவிடப்பட்ட ரூபா 31,151 செலவினத்தை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபையினால் நடாத்தப்படுகின்ற நூலகங்களில் புத்தகங்களை வெளியில் எடுத்துச் செல்லும் பிரிவில் வாசகர்களினால் 1993 ஆம் ஆண்டு முதல் 2015 மே மாதம் வரை பெறப்பட்டு மீளக் கையளிக்கப்படாத 346 புத்தகங்களின் பெறுமதி ரூபா 66,294 ஆக இருந்ததுடன் புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அவற்றின் பெறுமதிகளை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2004 திசெம்பர் 15 ஆந் திகதிய LG/07/2004 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2015 சனவரி மற்றும் யூலை

மாதங்களில் கடமை நேரத்தின் பின்னர் 02 மணித்தியாலங்களுக்குக் குறைவாக திட்டமிடல் குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருந்த நாட்களின் எண்ணிக்கை 14 ஆக இருந்ததுடன் அதற்காக ரூபா 60,750 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 23 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 192 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 205 ஆகக் காணப்பட்டனர்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட 03 பதவிகளில் 03 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 03 பதவிகளுக்காக 18 பேர்கள் மிகையாகக் காணப்பட்டனர்.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

**பறவைகள் பூங்கா சனசமூக மண்ட நிர்மாணம்**

2015 சனவரி 16 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வுத் திகதியான 2015 நவம்பர் 20 ஆந் திகதி வரையிலும் எந்த பணிகளுக்காகவும் பயன்பாட்டிற்கு எடுக்காது மூடப்பட்டிருந்ததுடன் மண்டபத்தின் தரை மற்றும் சுற்றியுள்ள பகுதி மிகவும் மோசமாக அழுக்கடைந்தும் காணப்பட்டது. மண்டபத்திற்குள் மாடுகள் உள்ளே செல்லக்கூடியதாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) சொத்து முகாமைத்துவம்